294

...ரபர் மீ 1935. மலர் 12—இதழ் 10.

வருஷ சந்தா ரூ 1-8-0

# ஜகன்மோகினி

ஆசிரியை
வை.மு.கோதைநாயகி அம்மாள்.

## பிச்சைக்காரக் குடும்பம்

அல்லது

## பணப்பேயின் தாண்டவம்

(முடிவடைந்துவிட்டது)

---

அதிகாரம்

6. அன்பு! அன்பு!! ஆழ்ந்த அன்பு!!!
7. ஆசைப் பேயின் ஆபாச லீலை
8. அட்டூழியம் என்றும் வெட்ட வெளியாகும்
9. உண்மைக்கு ஒரு நாளும் ஊனம் அணுகாது
10. நன்றி செலுத்துதல் என்றும் புகழ் தரும்.

---

அடுத்த இதழில்
இனிய புதிய நாவல் ஆரம்பம்.

JL
N35.12.11.
182981

...மோகினி" ஆபீஸ்
...டித்தெரு,
...கேணி சென்னை

அ 2 ஓ

# தயாராகிவிட்டது!

## "ஆனந்தவிகடன்" சித்திரப்போட்டி அகராதி.

**2000 பக்கங்களுக்கு மேலுள்ளது**

**விலை ரூபாய் பத்து தான்**

"பல அகராதிகளைப் புரட்டிப் பார்க்கவேண்டிய அவசியம் இனி உங்களுக்கு இல்லை. உங்களுக்கு வேண்டிய அகராதி ஒன்று தான் உண்டு. ஆனந்த விகடன் சித்திரப் போட்டிகளில் வெற்றியும், லாபமும் பெற இந்த அகராதி உங்களிடம் இருந்தே தீரவேண்டும். இந்த ஸெப்டம்பர் மீ 22உயிலிருந்து வேறு விதமாக அறிவிக்கப் பட்டாலன்றி "விகடன்" சித்திரப் போட்டிகளில் காணப்படும் எந்த வார்த்தையும் "ஆனந்தவிகடன் சித்திரப்போட்டி அகராதி" யில் இருந்தே தீரவேண்டும். அதாவது இந்த அகராதியில் இல்லாத எந்த வார்த்தையும் சித்திரப்போட்டிகளில் உபயோகப் படுத்தப்பட மாட்டாது." (ஆனந்தவிகடன் 29—9—1935).

மேற்படி புத்தகம் வேண்டுவோர் தபாற் செலவுக்காக ரூபாய் ஒன்று சேர்த்து அனுப்பி உடனே பெற்றுக்கொள்ளலாம்.

---

# ஏஜண்டுகள் தேவை

ஒவ்வொரு ஊரிலும் எமது 'ஜகன்மோகினியை' விற்பனை செய்ய செல்வாக்குள்ள ஏஜண்டுகள் தேவை. மற்ற விவரங்களுக்கு உடனே எழுதவும்.

"ஜகன்மோகினி ஆபீஸ்"

26, தேரடித் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை.

6-வது அதிகாரம்

## அன்பு! அன்பு!! ஆழ்ந்த அன்பு!!!

உலகத்தில் மக்களெல்லோரும் ஒன்றுபோல இருப்பதென்பதும், ஒரே மாதிரி மனப்பான்மையுடனிருப்பதென்பதுவும் கிடையவே கிடையாது. ஏதோ சில அம்சங்களோ, குணங்களோ ஒன்ருக அமைவதும் அரிது. சிலருக்கு அபூர்வமாக அமைவதுமுண்டு. இவை யாவும் அவரவர்கள் செய்த பலாபலன்களுக்கு ஏற்றவாறு நடைபெறும் விஷயங்களாகும்.

யாரார் எங்தெந்த தொழிலைச் செய்கிருர்களோ அந்தத் தொழிலின் அனுபவ நடை முறைகளின் குணங்கள் போக்குக்கள் யாவும் தாமாகவே படிந்துவிடுவது சகஜம். அதுபோன்று அந்த ஆஸ்பத்திரியின் வேலைக்காரர்களின் குணமும் போக்கும் அமைந்திருந்தன.

இந்த ஏழைப் பிச்சைக்காரியான சின்னம்மாளின் மனத் தவிப்பும் துடிப்பும் கடுமையான இருதயத்தையுடைய வேலைக்காரனுக்கு எப்படித் தெரியும்? அவன் சற்று அலக்ஷியமாகவே எண்ணி,பேசாது "போம்மே!...நீதான் அதிசயமா பிள்ளெயெ கொண்டாந்திருக்கரே ஆயிரம் புள்ளெங்க படுத்திருக்கிறது ஒண்ணும் அழுவலெ! அவங்களும் ஒன்னெப்போலெ ஆகாத்தியம் செய்யலே! வாய் திறக்காது விட்டுவிட்டுப் போயிட்டாங்க. நீ என்ன இப்படி கதர்ரே" என்று இளப்பமாகப் பேசினன்.

இதைக் கேட்ட சின்னம்மாளுக்கு இன்னும் ஆத்திரம் அதிகரித்துவிட்டது. கண்ணீர் ஆருய்ப் பெருக "ஐயா! நீ இப்படி தாக்ஷிண்யமின்றிப் பேசுகிருயே! நீ ஆணோடு பெண்ணோடு பிறக்க

வில்லையா! உனக்கு மக்களின் துயரம் தெரியாதா! ஈ விரக்கம் பச்சாத்தாப மில்லையா! நான் பரம தரித்திரமுடையவள். பிச்சைக்காரி. அன்றுடம் கஞ்சிக்கு பஞ்சாய்ப் பறக்கும் பஞைதான். இருப்பினும் எனக்கு உணர்ச்சிகூடவா இல்லாது போய்விடும். பணக்காரர்களாயினும் பிச்சைக்காரர்களாயினும் உணர்ச்சிகளுமா மாறிவிடும். அவை ஒன்ருகத்தானே இருக்கும்.

ஐயா! வீணுக வாதம் செய்யாதீர்கள். என்னை விட்டுவிடுங்கள். நான் இல்லாமல் குழந்தை அரை நிமிஷங்கூட இருக்கமாட்டான். அவன் அத்தனை உடம்பில் அழுது அழுது இறந்துவிடப்போகிருன். எனக்கு அவன்தான் உயிர். அவன்தான் செல்வம். அவன்தான் சகலமும். ஆகையினுல் அவனை பாழ்படுத்திவிடாதீர்கள். என்னை வருத்தாதீர்கள்,'' என்று கல்லும் கரைந்துருகும்படிக்குக் கூறினுள்.

வேலைக்காரன்.—அம்மா! இதென்ன காலை நேரத்தில் இப்படி தொந்தரவு செய்கிருய். இந்த ஆஸ்பத்திரியில் உனக்கென்று ஒரு விதி ஏற்படுத்த முடியுமா! அது முடியாது. ஏழைகள் என்ருல் வேறு விதிதான். ஏனெனில் எல்லோரையும் உள்ளே விடுவதென்று ஆரம்பித்தால் எல்லா நோயாளிகளைச் சேர்ந்தவர்களும் நாங்கள்கூடவிருக்கவேண்டும் என்று கத்துவார்கள். பிறகு நோயாளிகளுக்கு நிம்மதி ஏது? ஆஸ்பத்திரியில்தான் அமைதி ஏது? அதனுல்தான் இப்படி திட்டம் செய்திருக்கிருர்கள். நீ மாலை 4 மணிக்கு வந்து கேட்டில் காத்திருந்தால் அப்போது எல்லோரையும் உள்ளே விடுவார்கள். நீயும் வந்து பார்க்கலாம்.'' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டான்.

இனிமேல் என் செய்வாள் பாவம்! அந்த பிரம்மாண்டமான கட்டிடத்தில் அவளுக்கு திக்கு திசையே தெரியவில்லை. மனத்துயரமோ தாங்க முடியவில்லை. கண்ணீர் பெருகியவாறு பைத்தியக்காரியைப்போல வருகிருள். வீதிப் பக்கம் போவதற்கோ வழி தெரியவில்லை. தள்ளாடி தத்தளிக்கின்ருள். இவள் இவ்விதம் அலறிக்கொண்டு செல்வதைப் பார்த்தால் சிலர் பரிகஸிக்கிருர்கள். சிலர்

ஐயோ பாவம் என்று அனுதாபப்படுகிருர்கள். சிலர் என்ன ராக்ஷஸி. நீலித்தனம் செய்கிருளே! ஆஸ்பத்திரியில் கொண்ணுப் புடுவார்களா என்ன. நல்லாத்தான் பாத்துக்குவாங்க போயேன்.'' என்று கூறுகிருர்கள்.

இந்த வார்த்தைகள் எல்லாம் சின்னம்மாளின் மனத்தில் தைக்கின்றன. ஒன்றையும் காதில் வாங்காமல் சிறிது நேரம் அங்கேயே நின்று மன்ருடிப் பார்த்தாள். ஒன்றும் விமோசனமில்லை. பிறகு நேரம் அதிகமாகிவிட்டது; மணியும் 12 அடித்துவிட்டதால் காவல்காரர்கள் எல்லோரையும் விரட்டிக் கதவைப் பூட்டிவிட்டார்கள். சின்னம்மாள் வெளியே வந்து பார்த்தாள். தான் உள்ளே சென்றது ஒரு வழியாயும் இப்போது வந்தது வேருெரு வழியாயுமிருந்தது கண்டு "ஐயோ! வழியும் தவறிவிட்டோமே!'' என்று விசனித்தவாறு நாற் புறமும் சுற்றி யலைந்தாள். முதலில் வந்த வழியைக் கண்டுபிடித்தாள். அங்கு கிருஷ்ணன் வேலை செய்திருந்த விடத்திற்கு வந்து பார்த்தாள்.

அந்த இடத்தில் அவனைக் காணவில்லை. பதிலுக்கு வேறு ஆள் நின்றுகொண்டிருக்கக் கண்டு அவனிடம் சென்று "ஐயா! இங்கு காலையில் காவல் புரிந்த மனிதர் எங்கே?'' என்று வினயமாகக் கேட்டாள். அவர் வீட்டிற்கு சாப்பாட்டிற்குச் சென்றிருக்கிருர். ஏனம்மா எதற்காகக் கேட்கிருய்?'' என்ருன்.

சின்ன :—எனக்கு அவரைத் தெரியும். அதனுல் எங்கே காணவில்லையே என்று கேட்டேன். அவர் எப்போது திரும்பி வருவார்?

182981.

வேலை:—பகல் 4 மணி சுமாருக்குத் திரும்பி வருவார். அதற்கு மேல் வந்தால் பார்க்கலாம்—என்ருன்.

சின்னம்மாள் இதைக் கேட்டுக்கொண்டு இன்னும் மனங் குழம்பியவளாய்ச் சென்ருள். தங்க இடமா! அல்லது யாரேனும் தெரிந்தவர்களாவது இருக்கிருர்களா! எங்கு போவாள் என்ன செய்வாள் பாவம்! கிழவரை அப்படி பறி கொடுத்தாயிற்று. குழங்

தையை இவர்கள் தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள். எல்லாத் துன்பங்களையும் சகிக்க முடியாமல் தவித்தபடியே அந்த ஆஸ்பத்திரியின் வாசலில் இருக்கும் மரத்தடியில் விசனமே வடிவமாய்ப் பித்து பிடித்தவள் போல உட்கார்து விட்டாள்.

நல்ல பன்னிரண்டு மணி வெய்யல் கொளுத்துகிறது. மரத்தடியில் நிழல் இருக்கிறதெனினும் கானல் வீசுகிறது. தாகமோ நாக்கை வரட்டுகின்றது. பசியின் கோராமையோ ஒரு புறம் வதைத்து வாட்டுகிறது. மனத் துயரமோ சொல்ல முடியாத படிக்கு வதைக்கிறது. ஒரு பிச்சைக்காரி எத்தனை துன்பத்தைத் தான் சகிப்பாள்!

எதிரில் சிறிது தூரத்தில் ஒரு குளம் இருப்பதைக் கேட்டுத் தெரிந்துகொண்டு மெல்ல அங்கு சென்றாள். காலோ சூடு தாங்காது தவிக்கின்றது. அந்த அவஸ்தையுடன் குளத்திற்குச் சென்று தன்னுடையை நுவைத்துக்கொண்டு ஸ்நானம் செய்துவிட்டு அங்குள்ள மரங்களிலேயே புடவையைக் கட்டிக் காயவைத்து உடுத்திக் கொண்டாள். அக் குளத்துத் தண்ணீரை இரண்டு கை வாரி குடித்துவிட்டுக் களைப்புடன் ஆஸ்பத்திரி மரத்தடியிலேயே வந்து படுத்துவிட்டாள்.

மன வேதனை அதிகரிக்கத் தூக்கந்தான் சிலருக்கு வரும். அது போல சின்னம்மாளுக்கு தன்னை மீறிய கலக்கத்துடன் தூக்கம் வந்து வந்துவிட்டது. மரத்தடியிலேயே படுத்து நன்றாகத் தூங்கிவிட்டாள். விழித்துக்கொண்டு பார்க்கும்பொது மாலை நேரமாகிவிட்டது. ஆங்காங்கே விளக்கும் பொருத்தப்பட்டுவிட்டது கண்டு திடுக்கிட்டாள்.

சரேலென்று எழுந்து அலறி யடித்துக்கொண்டு கேட்டினருகில் வந்தாள். கும்பல் கும்பலாக வருவதைக் கண்டாள். தான் உள்ளே போக வேகமாகக் கூட்டத்தில் புகுந்து செல்கையில் காவல்காரன் தடுத்து "ஏம்மே... இதென்ன இப்படி ஓடுகிறாய். இன்னேரம் என்ன செய்தாய். மணி யடித்த ஓசை கேட்கவில்லையா? எல்லோரும் திரும்பிப் போகும்போது நீ உள்ளே போக வருகிறாயே இனிமேல்

நாளை சாயங்காலந்தான் உள்ளே விட முடியும்......ஓ......நாளைக்கு நாயிற்றுக்கிழமை...லீவு...உள்ளே யாரையும் விட முடியாது. நாளை மறுநாள்தான் பார்க்கலாம்......வெளியே போகலாம்.'' என்று கண்டிப்பாகக் கூறினன்.

இதைக் கேட்ட சின்னம்மாளுக்குத் தாங்க முடியாத துக்கம் ஏற்பட்டுவிட்டது. அந்த காவல்காரனின் காலைப் பிடித்துக்கொண்டு "ஐயா! நான் ஏழை பிச்சைக்காரி என்று என்னை அதட்டுகிறீர்கள். அதோ எத்தனை பெரிய மனிதர்கள் உள்ளே போகிருர்கள் பாருங்கள். நான் மட்டுந்தாளு போகக்கூடாது. ஏற்கெனவே குழந்தை கத்துவான். இன்னும் இரண்டு நாட்கள் பார்க்காவிட்டால் என்னுயிரே போய்விடும். குழந்தை ஒரே வேளையில் ஏங்கித் துடித்துவிடுவான். ஐயா! உமது காலை பிடித்துக்கொள்கிறேன்.'' என்று கெஞ்சினள்.

வேலைக்காரன்.—அம்மா! நீ சொல்வது வாஸ்தவந்தான். பணந்தான் உலகத்தில் ப்ரதானம் பெற்றது. ஆனல் நான் பணக்காரனல்ல. உன்னிலும் கேவலமான ஏழைதான். கூலிவேலை செய்து வயிறு வளர்க்கும் பரம தரித்திரந்தான். ஏதோ வயிற்றுப் பிழைப்பின் கொடுமையினல்—வறுமையின் வேதனையினல்—செய்யத்தகாது என்று தெரிந்தும் கேட்டில் பணம் வாங்கும் வேலையைச் செய்கிறேன். அதுவும் கால அளவுடன் வாங்கினல்தான் பிழைக்கலாம். அகாலத்தில் வாங்கிக்கொண்டு உள்ளே விட்டால் எனக்கு ஆபத்தாகத்தான் முடியும். இந்த கூலி வேலையும் போய்விடும். ஆகையினல் இப்போது விட முடியாது. என்னைக் கோபித்து உபயோகமில்லை. மணி யடிக்காதிருந்தாலும் நான் உள்ளே விட்டுவிடுவேன். மணியும் அடித்துக் கால் மணி நேரமாகிவிட்டது. இனி இந்த கேட்டில் தப்பித்தவறி விட்டுவிட்டாலும் உள் கேட்டில் கதவு திறக்கவேமாட்டார்கள். அங்கு ஒரு சட்டைக்காரி இருக்கிறுள்; கண்டிப்பாய்த் துரத்திவிடுவாள். நான் என்ன செய்வேன்?

சின்னம்.—ஐயா! இத்தனை கண்டிப்பாகக் கூறிவிட்டால் நான் என்ன செய்வேன்? பரதேசி பிச்சைக்காரி. பின்னல் வருவதை அநுப

வித்துக்கொள்கிறேன். உங்கள் மீது ஒரு குற்றமும் வராதபடிக்கு நான் பார்த்துக்கொள்கிறேன். தயவு செய்யுங்கள்—என்று கெஞ்சிக் கொண்டே வரும் கும்பலுடன் இடித்துக்கொண்டு மெல்ல நழுவி உள்ளே போய்விட்டாள்.

அந்த வேலைக்காரனும் போனுப் போகிருள் என்று பேசாம லிருந்துவிட்டான். நாராயணன் கோயிலுக்கு நாலு பக்கமும் வழி என்பது போல அந்த ஆஸ்பத்திரிக்குள் சென்ற சின்னம்மாளுக்கு வழியே தெரியவில்லை. எந்த பக்கம் பார்த்தாலும் நோயாளிகள் படுத் திருக்கும் படுக்கைகள் தென்பட்டன. எந்த இடத்தில் தன் சின்னன் இருக்கிருன் என்பது தெரியாது ஒவ்வொரு இடமாக பார்த்துக் கொண்டே ஓடுகிருள்.

கட்டிலில் தாயும், தொட்டிலில் குழந்தையுமாக சில வார்டி லிருப்பதைக் கண்டு இது ப்ரஸவித்தவர்கள் இருக்கும் வார்டு என்று தெரிந்துகொண்டு பின்னும் ஓடினுள். நோயாளிகள் தினுசு தினுசாக கட்டுகளும் பத்துகளும் போட்டுக்கொண்டு படுத்திருக்கும் கோரக் காட்சி கண்டு சகிக்கவே முடியவில்லை. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பாதையைத் தாங்கமாட்டாது கத்துவது பரம வேதனையாக இருந்தது.

சின்னனை தேடிப் பிடிக்கத் தெரியவில்லை. அலைகிருள் பாவம். அவள் அவ்வாறு பார்த்துக்கொண்டு செல்வதைக் கண்டு சில நர்ஸ் களும் வேலைக்காரிகளும் அவளைத் தடுத்து பிடித்துக்கொண்டு "ஏய்! நீ யாரு! மணியடித்துக் கதவு சாத்தியாகிவிட்டது. இன்னும் இங்கு திரிகின்ருயே! என்ன சேதி......ஊம்...வெளியே போய்விடு. துரை வரும் நேரமாகிவிட்டது. வந்தால் அடித்துத் துரத்துவார் போ! போ!...என்று கையைப் பிடித்து இழுத்துத் தரதரவென்று தள்ளிக் கொண்டே வந்தார்கள்.

ஏற்கெனவே பயந்து நடுங்கிக்கொண்டும் விசனப்பட்டுக் கொண்டுமிருந்த சின்னம்மாள் வெகு பணிவுடனும் சாந்தமாயும் "அம்மா! இங்கு என் தம்பியைக் கொண்டுவந்து விட்டிருக்கிறேன்.

அவன் எங்கு படுத்திருக்கிறன் என்பது தெரியவில்லை. அவனைப் பார்ப்பதற்காக வந்தேன். தயவு செய்து அவனைக் காட்டிவிடுங்கள். பார்த்துவிட்டு ஓட்டமாக ஓடிவிடுகிறேன்.'' என்று கெஞ்சிக் கேட்டாள்.

இதைக் கேட்ட அந்த நரஸுகள் "...தே.,.இனிமேல் இங்கு யாரையும் பார்க்க முடியாது. அது தம்பியோ, தமயனே எல்லோரையும் நாளை மறுநாள்தான் பார்க்கலாம். இப்போது இந்நேரத்தில் நீ இங்கிருப்பதே ஆபத்து. போய்விடு. ஆஸ்பத்திரியின் ரூல் தெரியாமல் 7 மணிக்கு இங்கு வந்து நிற்பது மிகவும் குற்றம். ஓடு...ஓடு பேசாதே.'' என்று மீண்டும் தள்ளிக்கொண்டே கேட்டுவரையில் சென்று விட்டு அங்குள்ள காவல்காரனை அதட்டி மிரட்டி அட்டகாஸம் செய்துவிட்டுச் சென்றுர்கள்.

அதற்குமேல் என்ன செய்வது? விதியை எண்ணிப் புலம்பிக் கொண்டே நடந்தாள். அந்த காவல்காரனும் திட்டினன். அதையும் வாங்கிக்கொண்டு முதல் கேட்டுக்கு வந்தாள். அங்கிருந்த காவல்காரன் "என்னம்மா!பார்த்துவிட்டு வந்தாயா!'' என்றுன்.நடந்ததை தெரிவித்துப் புலம்பினள்.

இது கேட்ட காவல்காரன் "நான் சொன்னல் கேட்டாயா? நாங்கள்தான் பார்த்துப் பார்த்து தலை பொட்டையாகி இருக்கிறதே! ஐயோ பாவம்! எத்தனையோ பேர்கள் கர்ப்பிணிகளை உள்ளே யனுப்பி விட்டுத் தவிக்கும் தவிப்பை பார்த்தால்தானே தெரியும். ப்ரஸவித்தாளா இல்லையா!...குழந்தை ஆணு! பெண்ணு! முதலிய எந்த தகவலும் தெரியாது எத்தனை ஏழைகள் வீதி கேட்டிலேயே நின்று தவிப்பார்கள். எத்தனை கேட்டாலும் சொல்வதற்கு ஆளுண்டா? உள்ளே இருக்கும் நிலைமையை அவர்கள் சொன்னலல்லவோ வெளியில் இருக்கும் நாங்கள் அவர்களுக்குத் தெரிவிக்க முடியும்? அந்த கதையைக் கூறி முடியாது. வீதியில் நின்று கத்தும் பரிதாபம் பார்க்கச் சகிக்க முடியாது. வெகு நேரங் கழித்துத் தான் செய்தி தெரிந்து கொண்டு செல்வார்கள். அப்படிக்கிருக்க உன் கதி என்னவாகும்!'' என்றுன்.

இதற்குமேல் அவள் என்ன செய்ய முடியும்? தலைவிதியை எண்ணிக்கொண்டு புலம்பியபடியே வெளியே வந்துவிட்டாள். பையனின் நினைவாகவே இடிந்துபோய் ஓர் மரத்தடியில் உட்கார்ந்துவிட்டாள். ஏழையின் கதிக்கு இரங்கும் புண்ணியவான்கள் யாருமில்லை. இவளுடைய துரதிருஷ்டத்தினால் அங்கு காவல் காக்கும் கிருஷ்ணனும் வரவில்லை. எல்லாம் சோதனையின் கொடுமை என்று எண்ணி புலம்பிக்கொண்டே அன்றும் மறு தினமும் கழித்தாள்.

நிமிடத்திற்கு நிமிடம் உயிர் போய்க் கொண்டிருப்பதுபோலான வேதனையுடன் தவிக்கின்றாள். கிருஷ்ணனும் வராமலிருப்பது காரணம் தெரியவில்லை. அந்த வேலையாளைக் கேட்டதில் அவனுக்கு ஜுரம் கண்டு ரணத்தின் வலி அதிகமாகிவிட்டதால் அவனும் ஆஸ்பத்திரி உள்ளேயே புருடர்கள் வார்டில் படுத்திருக்கிறான். அவன் வரமாட்டான் என்று கூறிவிட்டான்.

இதைக் கேட்டு பின்னும் இடிந்து போய்விட்டாள். தன்னுடைய பாவம்தான் இப்படி அடித்து விட்டதென்று கண்ணீர் வடித்துக் கலங்கினாள். இந்நிலைமையிலேயே அவள் தத்தளித்துக் கொண்டு அந்த இரண்டு நாட்களையும் கழித்து மூன்றாம் நாள் மாலையிலாவது தனக்குக் குழந்தையைப் பார்க்கும் பாக்கியம் கிடைக்குமா வென்று வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

மாலை 5 மணி அடித்தவுடனேயே அந்த கேட்டினருகில் காத்துக் கொண்டிருந்தாள்: கூட்டம் சேர்ந்துவிட்டது. கதவும் திறக்கப்பட்டது. உடனே சின்னம்மாள் உள்ளே சென்று விசாரித்துக் கொண்டே தட்டித் தடுமாறியவாறு குழந்தைகள் இருக்கும் வார்டிற்குச் சென்று தேடினாள்.

அங்கு சிறிய குழந்தைகள் முதல் 15 வயது சிறுவர்கள் வரையில் எல்லோரும் தனித் தனிப் படுக்கையில் படுத்திருந்தார்கள். இக் குழந்தைகளில் பெரும் பாகமான குழந்தைகள் புலம்பிக்கொண்டே இருக்கின்றன. அவைகளை கவனிக்கும் தாதிகள் சிள்ளு சிள்ளுவென்று முகத்தைச் சுளித்துக்கொண்டு "சனியன்களே! எழு

வெடுத்த பீடைகளே! அழுகை என்ன வேண்டி இருக்கிறது. உபத்திரவம்...இச் சனியன்களால் ப்ராணன் போகிறது. என்னேரம் பார்த்தாலும் தொந்தரவாகிவிட்டது. அம்மா! என்ன அம்மா! பெருந் தொல்லையாகி விட்டது......

என்று கண்டபடி திட்டுவதும்,சிலர் குழந்தைகளை அடிப்பதும், கிள்ளுவதும்,தாறுமாறுக இழுப்பதும் கைகளைப் பிடித்து முறிப்பது மாக லீலைகள் செய்கிறுர்கள். ஒரு சில தாதிகள் சிறிது அன்பாகவும் நடக்கிறுர்கள். சில தாதிகள் சில குழந்தைகளை வைத்துக்கொண்டு தடபுடலாகக் கொஞ்சவும் கொஞ்சுகிறுர்கள்.

இந்த பலவிதமான வைபவங்களை எல்லாம் கண்ட சின்னம்மாளின் வியப்பிற்கு எல்லையே இல்லை. அவளுடைய சின்னுனை யார் என்ன பாடு படுத்துகிறுர்களோ! ஆஸ்பத்திரி என்றுல் நன்றுகக் கவனிப்பார்கள் என்று சொல்லுகின்றுர்களே! இப்படி மிரட்டுவதும் அடிப்பதும் கிள்ளுவதுமா சரியாக அன்போடு கவனிக்கும் முறையாகும்! ஐயோ! ஈச்வரா! இதென்ன அனியாயம்!" என்று தவித்தவாறே ஒவ்வொரு குழந்தையாகப் பார்த்துக்கொண்டே சென்றுள்.

அங்கு கோடியில் ஒரு கட்டிலில் சின்னுன் "அக்கா! அக்கா!" என்று புலம்பிக்கொண்டே இருக்கிறுன். பக்கத்தில் ஒரு தாதி உட்கார்ந்து பையனை அதட்டியும் மிரட்டியும் திட்டிக்கொண்டே ஐஸை வைத்துக்கொண்டு "ஏ சனியனே! அக்காவாம் அக்கா! மூதேவி தரித்திரம். நானும் எத்தனையோ குழந்தைகளைக் கண்டிருக்கிறேன். மூன்று நாளாக இப்படி அழும் பீடையை நான் எங்கும் கண்டதே இல்லை. சனியன் பிடித்த அழுகை...அழுது அழுது முகம் வீங்கி விட்டது. இப்படி அழுதால் இந்த இழவெடுத்த பீடையுடன் எவ்விதம் போராடுவது...என்னடா சனியனே!...நான் அப்புறம் அடிப்பேன்...என்று அதட்டுவதை சின்னம்மாள் பார்த்துக்கொண்டே போய்விட்டாள்.

இவளுடைய துக்கமோ கரை புரண்டுவிட்டது. என்ன செய்வாள் பாவம். வயிற்றெரிச்சலுடன் ஓடிவந்து "சின்னுன்! சின்னுன்!

...இதோ நான் இருக்கிறேன்...அழாதே! அம்மா! குழந்தையை இப்படி மிரட்டுகிறீர்களே! மிரட்டினால் அவன் என்ன செய்வான். என்னை விட்டு ஒரு நிமிடமேனும் பிரிந்தறியாதவன். நாங்கள் மகா ஏழைகள் பிச்சைக்காரர்கள். ஒருவரோடொருவர் பிரியாது அன்புடன் வாழ்வதுதான் எங்களுக்குச் செல்வம். அதுதான் எங்களது ஆநந்தம். அதுதான் நாங்களனுபவித்து வந்த உண்மையான ஆநந்தமாகும்.

தாயே! உங்களை நம்பி விட்டிருக்கும் சிறிய குழந்தையை நீங்களே இப்படி அதட்டினால் குழந்தை என்ன செய்யும்...என்று பரிதாபத்துடன் கூறிக்கொண்டே சின்னனைச் சேர்த்துகட்டிக் கொண்டுகண்ணீர் வடித்தாள். சின்னனும் தனது முழு ஆநந்தத்தையும் அடைந்தவன் போன்று அக்காளை இறுகத் தழுவி கட்டிக்கொண்டு முகத்தோடு முகம் பதித்து அப்படியே ஐக்கியமாகிவிட்டான்.

இதைக் கேட்ட—கண்ட--தாதி, "ஓகோ! என்னடீ கதை யளக்கிறாய்! என்னைக் கண்டிக்க அதிகாரியாகி வந்துவிட்டாயே! அதிகம் பேசாதே அல்பமே!"—என்று முடுக்காகக் கூறிவிட்டுச் சென்றாள். ஆஸ்பத்திரியில் இம்மாதிரியாக நடக்கும் சில அக்கிரமங்களைக் கூறுவதென்றால் நேரமே போதாது. எத்தனை பெரிய பெரிய ஆஸ்பத்திரிகளில் இம்மாதிரி அனியாயங்கள் நடப்பதை ஆஸ்பத்திரியில் படுத்திருந்து வந்த நோயாளிகள் கூறக் கேட்கிறோம்...எதற்கும் எங்கு சென்றாலும் பணம்...பணம்...பணந்தான் பிரதானமாக இருக்கிறது.

பிச்சைக்காரக் குழந்தையின் கவனிப்பைக் கூறவேண்டுமா! அவளுடைய மனது புழுங்கியது. மார்பு துடித்தது. கண்ணீர் பெருகுகின்றது. வாய் திறந்து ஏதும் பேசவில்லை. சின்னனைக் கட்டிக்கொண்டு கோவெனக் கதறினாள். குழந்தை உயிர்ப் பிச்சை கொடுத்தால் போதுமென்று கடவுளைப் பிரார்த்தனை செய்தாள். குழந்தைக்குத் தானே ஐஸை வைத்தபடியே பல சமாதானங்களைக் கூறித் தேறுதல் சொன்னாள்.

சின்னனே ஒரே பிடியாக நானும் உன்னோடு வந்துவிடுவேன்

என்று பிடிவாதம் செய்து அழ வாரம்பித்தான். அவனுக்குப் பல வழிகளிலும் சமாதானத்தைக் கூறி "சின்னு! நீ அழாதே. நாமோ பரம தரித்திரர்கள். பிச்சைக்காரர்கள். ஒருவாய் கஞ்சிக்குப் பஞ் சாய்ப் பறக்கும் நிலைமை உனக்குத் தெரியும். உனக்கோ உடம்பு பல மாக வந்திருக்கிறது. நான் உன்னை அழைத்துக்கொண்டு போய் விட்டால் உன்னுடைய உடம்பு குணமாவதற்கு வைத்தியம் செய்ய பணமேது. பணமில்லாவிட்டால் பிணத்திற்குச் சமம் அல்லவா!

சின்னு! நீயும் தாதாவைப்போல இறந்துவிட்டால் நம் கதி என்ன வாகும். நான் எக்கதியாவது. நானும் எங்கேனும் குளத் திலோ கிணற்றிலோ விழுந்துதான் சாகவேண்டும். நீதானே எனக்கு கதி. உன்னை விட்டால் நான் எப்படி வாழுவேன். நமக்குப் பண மில்லாமல் வைத்தியம் செய்யாமையினால் நமது தாதா இறந்துபோய் விட்டார். உனக்கும் அப்படி யாகாமலிருக்கும் பொருட்டுத்தான் நான் இங்கு கொண்டுவிட்டேன். நீ அழாதே. சமத்தாக இரு. நான் தினம் வந்து உன்னைப் பார்க்கிறேன். உனக்கு சீக்கிரம் உடம்பு குணமாகிவிடும். நாம் போய்விடலாம். நீ அழாதே கண்ணு!" என்று வெகு நயமாக பல விதத்திலும் தேறுதல்கள் கூறிச் சமா தானம் செய்தாள்.

சின்னுன் தன் பாட்டன் இறந்ததை யறியவில்லை. உடம்பு அதிகமாகவிருந்ததால் அவனுக்கு ஒன்றுமே தெரியாது. அவன் இதைக் கேட்டதும் "தாதா இறந்துவிட்டாரா!...அக்கா! தாதா எப்போது இறந்துவிட்டார்? ஐயோ! தாதா எப்படி இறந்துவிட் டார்?" என்று புலம்ப வாரம்பித்துவிட்டான்.

இதைக் கேட்ட சின்னுளுக்கு "ஐயோ! என் சொன்னேம்!" என்று ஆய்விட்டது. உடனே அவனைச் சமாதானம் செய்து இறந்துவிட்ட பரிதாபத்தைக் கூறி அதையே ஆதாரமாகக் கொண்டு பையனைத் தேற்றினாள். இதற்குள் வெளியே செல்லும் நேரத்தைக் குறிக்கும் மணி யடித்துவிட்டது. 'எல்லோரும் வெளியே போங்கள் போங்கள்' என்று சேவகன் கத்த வாரம்பித்துவிட்டான்.

உடனே சின்னம்மாள் குழந்தைக்கு வேண்டிய மட்டிலும் சமாதானம் கூறிவிட்டு அன்போடு கட்டியணைந்து முத்தமிட்டுப் பின் தாதியை நோக்கி "அம்மா! தாங்கள்தான் இவ் வேழைமீது அன்பு காட்டவேண்டும். நாங்கள் பரம ஏழைகள். தாங்கள் குழந்தையிடம் தயவு காட்டி இவனுடைய உயிர்ப் பிச்சையைக் கொடுக்க வேண்டும். எனக்கு ப்ரபஞ்சமே இவன்தான். ஏழைகளிடம் அன்பு காட்டாது வெறுத்தால் நாங்கள் எந்த தைரியத்தைக் கொண்டு பிழைப்போம். நீங்கள்தான் எங்களுக்கு உயிர் கொடுக்கவேண்டும்" என்று மன்றாடிக் கெஞ்சியவாறு தனது கதையைக் கூறினாள்.

எத்தனை தான் கல்போன்ற மனதாயினும் இந்த பரிதாபத்தைக் கேட்டால் மனம் இளகாமலிருக்க முடியுமா? அந்த தாதிக்கு முன் கோபமும் தாராங்காரமும்தான் முன்னால் வந்துவிடும். அது தணிந்த அடுத்த நிமிடமே மனம் இளகி தன்னையே வெறுத்துக்கொள்வாள். கண்ணீரும் விடுவாள். இத்தகைய சுபாவ முடைய மனோன்மணி என்ற அந்த தாதிக்கு இந்த பிச்சைக்காரியின் கதை உண்மையில் மனத்தை இளக்கிவிட்டது. அவள் சிறிது நேரம் தம்பித்து நின்றாள்.

அடுத்த விநாடியே மனம் தெளிந்தவளாய்...அம்மா!...நான் ஏதோ என் தொழிலின் முறையில் கோபமுற்றுச் சொல்லிவிட்டேன். குழந்தையை அதட்டிவிட்டேன். இதை நீ பொருட்படுத்தாதே. ஏழைகள் என்று இரக்கங் காட்டாது நான் வெகு திமிராகத்தான் நடந்துவிட்டேன். எல்லோரும் ஒரு நாளைக்கு இறக்கவும் கடவுளுக்குப் பதில் சொல்லவுந்தான் போகிறோம் என்பதை மறந்தேன்...நீ கண்ணீர் விடாதே! கவலைப்படாதே! நான் உனது தம்பியை கட்டாயம் கவனித்துக் கொள்கிறேன்.

அம்மா! நீ அன்றாடம் கஞ்சிக்குப் பறப்பதாகத் தெரிவித்தாயே! நான் ஒரு வார்த்தை சொல்கிறேன் கேட்கிறாயா! அதாவது ஸ்பெஷல் வார்டில் வந்திருக்கும் ஒரு செல்வச் சீமாட்டிக்கு எப்போதும் கூடவே இருந்து வேலை செய்ய ஓர் வேலைக்காரி வேண்டுமாம். நீ அப்படி இருந்து செய்கிறாயா! அம்மாதிரி செய்தால் நீ

எப்போதும் இந்த ஆஸ்பத்திரியிலேயே இருக்கலாம். உன் தம்பியையும் அடிக்கடி பார்க்கலாம். உன் வயிற்றுப் பிழைப்பையும் தேடியதாகும். என்ன சொல்லுகிறுய்!'' என்று கேட்டாள்.

பழம் நழுவிப் பாலில் விழுந்து அதுவும் நழுவி வாயில் விழுந்ததுபோல இந்த வார்த்தையைக் கேட்டதும் சின்னுளுக்கு 'இது உண்மையான சொல்லா! நாம் எங்கே இருக்கிறோம்?' என்ற சந்தேகங்கள் உண்டாகிவிட்டன. அந்த வார்த்தைகளைக் கேட்ட ஆநந்தத்தினுல் மெய் மறந்துபோய் தம்பித்தாள். உடனே அந்த தாதியின் இரண்டு கால்களையும் பிடித்துக்கொண்டு கண்ணீர் பெருகியவாறு "என் தாயே! நான் என் பிறவியிலேயே இந்த மாதிரி ஓர் ஆநந்தத்தை இதுபரியந்தம் கண்டதில்லை. என்னுடைய மனத்தினுள்ள உணர்ச்சியை எப்படி நான் எடுத்துக் கூறவேன். எண் சாண் வயிறுக்கு ஆகாரம் தேடிக் கொடுத்த தங்கள் பேருதவியை நான் என்றுமே மறக்கமாட்டேன். எந்த தோட்டி வேலையாயினும் நான் இப்போதே செய்யத் தயாராக விருக்கின்றேன்'' என்று கூறினுள்.

உடனே தாதி சின்னம்மாளைத் தூக்கி நிறுத்தி "அம்மா! புலம்பாதே! இன்று மணி யடித்தாகிவிட்டது. நீ ஒன்று செய். நாளைக் காலையில் நீ கேட்டிலேயே இரு- அப்போது என் வீட்டிலிருந்து எனக்குக் காலை ஆகாரம் வரும். அதை நீ வாங்கிக்கொண்டு அவர்களோடு வந்துவிடு. பிறகு நான் பார்த்துக்கொள்கிறேன். நீ கேட்டில் நின்றபடியே ஆகாரம் கொண்டு வருபவர்களை எல்லாம் மனோன்மணியம்மாளுக்கா என்று கேளு. ஆமாம் என்றுல் இந்த கடிதத்தைக் காட்டு. உடனே உன்னை யழைத்துக்கொண்டு வருவார்கள். நீ வந்துவிடு'' என்று கூறி ஒரு சீட்டையுங் கொடுத்தாள்.

சின்னம்மாளுக்கு இதைக் கேட்டதும் பேராநந்தம் உண்டாகிவிட்டது. தனக்கு அதிர்ஷ்டச் சூரியன் உதயமாகிவிட்டான் என்ற ஓர் புத்துணர்ச்சியும் உறுதியும் ஏற்பட்டு அவளை ஓர் ஆட்டு ஆட்டியது. தனது நன்றி யறிதலையும் விச்வாஸத்தையும் காட்டி

வந்தனம் செய்துவிட்டுச் சின்னனுக்கும் தேறுதல் கூறிப் பின்னர் விடை பெற்றுக்கொண்டு சென்றுவிட்டாள்.

இந்த ஆஸ்பத்திரியிலேயே கிருஷ்ணன் படுத்திருப்பதால் அவனையும் பார்த்துவிட்டுச் செல்லவேண்டு மென்று மனத்தில் மிக்க ஆவல் உண்டாகியது. ஆனால் நேரம் அதிகமாகிவிட்டதால் செல்ல முடியாது போய்விட்டது. உடனே வெளியில் வந்துவிட்டாள். மறு நாள் உதயத்தையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். தனக்குக் கிடைக்கப் போகும் அதிர்ஷ்டத்தின் உற்சாகத்தின் மிகுதியால் பசியும் தோன்றவில்லை. தாகமும் எடுக்கவில்லை. எதிர் காலச் சந்தோஷ எண்ணத்திலேயே ஈடுபட்டு இரவை வெகு சிரமத்துடன் ஓட்டிவிட்டாள்.

மறு தினம் உதயமாகியதும் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு நெத்தியில் குங்குமமணிந்து கேட்டில் தயாராக நின்று தாதி தெரிவித்ததுபோல ஒவ்வொருவரையும் கேட்டுக்கொண்டே நின்றாள். மனோன்மணிக்கு ஆகாரங் கொண்டுவரும் ஆட்கள் வந்தார்கள். அவர்கள் இச் சீட்டைப் பார்த்ததும் அவளையும் உடனழைத்துக்கொண்டு உள்ளே சென்றார்கள்.

மனோன்மணி இவளைக் கண்டதும் பரிதாபத்துடன் வரவேற்றாள். சின்னான் பக்கத்தில் உட்கார வைத்துவிட்டுத் தான் உடுத்திப் பழயதாகிவிட்ட ஓர் சேலையை வண்ணார மடிப்பிலிருந்து எடுத்து வந்து சின்னம்மாளுக்குக் கொடுத்து உடுத்துக்கொள்ளச் செய்தாள். ஒரு ரவிக்கையும் கொடுத்தாள். சின்னம்மாளை நன்றாக சுத்தமாக உடை யணியச் செய்த பின்னர் தன்னுடைய ஆகாரத்தில் கொஞ்சம் அவளுக்கும் கொடுத்துபசரித்துப் பின்னர் அவளை யழைத்துக் கொண்டு ஸ்பெஷல் வார்டிற்குச் சென்று முன் தெரிவித்த சீமாட்டியிடம் அறிமுகம் செய்வித்து "அம்மணீ! நீங்கள் ஓர் வேலைக்காரி வேண்டு மென்றீர்களே! இந்தப் பெண்ணை வைத்துக்கொள்ளலாம். இவள் பரம ஏழை; மிகவும் நல்லவள். உத்தம குணமுடையவள். பார்ப்பதற்கு விலக்ஷணமாக இருக்கிறாள். இவளை நீங்கள் வைத்துக் கொள்ளலாம் என்று அழைத்து வந்தேன்." என்று கூறினாள்.

இதைக் கேட்ட அந்த சீமாட்டி மிகவும் சந்தோஷ மடைந்து "அப்படியா! நான் இந்தப் பெண்ணை வைத்துக்கொள்கிறேன். வீடு வாசல் இருந்தால் அடிக்கடி வீட்டிற்குப் போய்விடுவாள். இப்படி இருப்பதால் இங்கேயே இருப்பாள். ஆகையினால் ஆக்ஷேபனை இன்றி நான் வைத்துக்கொள்கிறேன்'' என்று கூறிவிட்டாள்.

இந்த வார்த்தை சின்னம்மாளுடைய சந்தோஷத்தின் எல்லையைக் கடந்தது. அவள் தாதிக்கு வணக்கஞ் செய்துவிட்டுப் பிறகு தனக்கு எஜமானியாகப் போகும் அம்மாளுக்கு வணங்கி, மரியாதையாயும் பரிதாபகரமாயும் நின்றாள்.

தாதி மனோன்மணி, சின்னம்மாளுக்கு எஜமானியம்மாளிடத்தில் நடந்துகொள்ளும் முறைகளை போதித்துவிட்டு எஜமானியம்மாளிடம் விட்டு விட்டுச் சென்றாள். சின்னம்மாளின் மன நிலைமையைக் கூற வேண்டுமா? முகமே ஒரு சோபிதமான களையை அடைந்து மிகவும் பணிவுடனும் வினயத்துடனும் தன் எஜமானியம்மாள் என்ன கட்டளையிடுவார்களோ என்று எதிர் பார்த்துக்கொண்டே இருந்தாள்.

தேவமணி என்கிற அந்த எஜமானியம்மாளும் சின்னம்மாளிடம் சிறு சிறு வேலைகளைச் சொன்னாள். அவைகளை வெகு வணக்கத்துடன் செய்தாள். மத்தியில் பகல் வேளைகளில் தன் சின்னனையும் அடிக்கடி சென்று பார்த்துத் தேறுதல் கூறிக்கொண்டு வந்தாள். கிருஷ்ணன் படுத்திருந்த இடத்தைத்தான் இவளால் சீக்கிரத்தில் கண்டு பிடிக்க முடியவில்லை.

எஜமானியம்மாளின் அன்பிற்கு அவள் மிகவும் பாத்திரமாகிவிட்டாள். அந்தம்மாளின் உதடு அசைவதற்கு முன்னமேயே தயாராக வேலையைச் செய்து வந்தாள். எஜமானியம்மாளுக்கு உடம்பு சீக்கிரம் குணமடைய வேண்டுமென்று கடவுளையும் பிரார்த்தனை செய்து வந்தாள். தனக்கு விடிவு கால உதயம் ஆகி யிருப்பது என்றும் நிலைத்திருக்கவேண்டுமே என்று வேண்டிக்கொண்டே இருந்தாள்.

ஆனால் நாம் ஒன்று நினைத்தால் தெய்வம் ஒன்று நினைப்பது சகஜமல்லவா? அதுபோல எஜமானியம்மாளுக்கு குணமே ஏற்பட

வில்லை. சின்னம்மாள் தனக்கு ஒய்வான சமயத்தில் புருடர்களுடைய வார்டுகளுக்குச் சென்று தாதிகளுடன் கூட உலாவச் செல்வாள். அவளுடைய கருத்து கிருஷ்ணனைப் பார்க்கவேண்டு மென்பதே யாகும்.

அம்மாதிரி சில தினங்கள் வார்டுகளைச் சுற்றிப் பார்த்தாள். ஒரு வார்டில் கிருஷ்ணன் படுத்திருப்பதைக் கண்டு சந்தோஷ மடைந்து அருகில் சென்று பரிதாபகரமான பார்வையுடன் நின்றாள். கிருஷ்ணன் படுத்திருந்தபடியே கண்ணை மூடிக்கொண்டிருந்தான்.

சின்னம்மாள் சந்தடி செய்யாமல் சில் நிமிடங்கள் நின்று பார்த்தாள். தன்னாலல்லவா இந்த கதி ஏற்பட்டது என்ற எண் ணமும் உணர்ச்சியும் உண்டாகிவிட்டதால் தன்னை யறியாமல் ஒரு விதமான வருத்தமும் கண்ணீரும் வந்துவிட்டன. தன்னை யார் கவ னித்து விடுவார்களோ வென்கிற எண்ணத்தினால் சிறிது தியங்கினாள்.

அயர்ந்து நித்திரை செய்யும் இவரை எழுப்புவது கூடா தென்று எண்ணி மவுனமாக நின்றாள். அதற்குள் நேரமாகிவிட் டதோ வென்று பயந்து எஜமானியம்மாளிடம் போய்விட்டாள். அவ்வாறு சென்றுவிட்டாளே யன்றி மனத்தில் மட்டும் ஒருவித மான விசனமும் கவலையும் குடிகொண்டன. கிருஷ்ணன் படுத்தி ருந்த காக்ஷி மிகவும் பரிதாபமாயும் மனத்தை உருக்கக் கூடியதாயும் இருந்தது. தனக்கு உபகாரம் செய்ய வந்த மனிதனுக்கு ஆபத்து வந்துவிட்டதே என்ற தன்னை மீறிய விசனம் சிறிது தோன்றி வதைத்ததால் மனம் நிம்மதி கொள்ளாது தவித்தாள்.

தன்னுடைய எஜமானியும் நித்திரை செய்துகொண்டிருந்த தால் உடனே மீண்டும் அவ்விடத்திற்கே வந்தாள். அப்போதும் கிருஷ்ணன் அயர்ந்து நித்திரை செய்வதே போலப் படுத்திருந்தான். அவன் எச்சில் உமிழ்ந்தும், வாந்தி எடுத்திருந்ததுமான ஓர் தட்டை ஈக்கள் மொய்த்துக்கொண்டும் கொசுக்கள் சூழ்ந்துகொண்டு மிருந் தன. அந்த கொசுக்களும் ஈக்களும் க்ருஷ்ணன் மீதும் தாவி உலாவு வதைக் கண்டாள். உடனே தானே அந்த தட்டைக்கொண்டு சுத்தி

செய்துகொண்டு வந்து அதே இடத்தில் வைத்தாள். அப்படியே சற்று அசைவற்று நின்றுவிட்டாள்.

அதே நிமிடம் கண்ணை விழித்த கிருஷ்ணன் சின்னம்மாள் நிற்பதைக் கண்டு ப்ரமிப்பும் ஆச்சரியமும் அடைந்து "சின்னம்மாள்! ...சின்னம்மாள்"...என்றான். மேலே ஒன்றும் சொல்லவில்லை. கண் மூடிவிட்டான்....அந்தோ! இப் பிச்சைக்கார சிறுமியின் மனம் எப்படித்தானிருக்கும். கல்லாகிவிட்டாள்.

---

## 7-வது அதிகாரம்

## ஆசைப் பேயின் ஆபாஸ லீலை

"உலகத்தில் எல்லாவற்றையும் விடப் பிரதான மானது அன்பல்லவா! அன்பிற்கு அடிமையாகாத மக்களுமில்லை. மாக்களுமில்லை. ஈ, எறும்பு முதல் எண்ணுயிரம் ஜாதியும் அன்பு கொண்டு ஒழுகுவதைக் காணவில்லையா! அத்தகைய அன்பு மக்களுக்கு மக்கள் உண்டாவது வியப்பா?

நமது சின்னம்மாள் தம்பித்து நின்றவள் அன்பு மயமான இருதயத்துடன் கிருஷ்ணனை நோக்கி, "ஐயா! உடம்பு எப்படி இருக்கிறது......ஏன் கண்ணை மூடிக்கொண்டீர்கள். என்ன வேண்டும்?" என்று வெகு வணக்கமாயும் மரியாதையாயும் கேட்டாள். அவனுடைய பரிதாபத்தைக் கண்டு சகிக்கமாட்டாமல் கண்ணில் நீர் உதிர்ந்துவிட்டது.

கிருஷ்ணன் கண்ணை மூடியபடியே, மெல்ல மெல்ல பேசத் தொடங்கி "சின்னம்மா! நீ இங்கு எப்படி வந்தாய்? உன்னை உள்ளே விட்டார்களா! குழந்தைக்கு எப்படி இருக்கிறது. சற்று குணமா? நாம் ஒன்று நினைக்கக் கடவுள் ஒன்று நினைத்துவிட்டார். என்

ணுல் ஒரு உபகாரமும் செய்ய முடியாமல் இப்படி படுத்துவிட்டேனே என் செய்வேன். எனது மனத்தில் இதே நினைவாக இருக்கிறது. ஒரு கண்ணைத் திறக்கவே முடியவில்லை. மிகவும் வலிக்கின்றது. ஒரு காதும் அப்படியே குத்தும் வலியுமாக இருக்கிறது. நீ எப்படி இங்கு வந்தாய்?'' என்று கேட்டான்.

சின்னம்மாள் :— எல்லாவற்றிற்கும் கடவுள் இருக்கிறார். நீங்கள் இதற்கெல்லாம் கவலைப்படாதீர்கள். கடவுளின் கிருபையால் என் பிறவியிலேயே என் வாழ்நாளில் நான் கண்டறியாத விசித்திரமான மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. என் தம்பிக்குச் சற்று குணமாவதாகக் கூறுகிறார்கள். (தன் புதிய வாழ்க்கை விநோதத்தைக் கூறி) இம்மாதிரி நடந்திருக்கிறது. இது அந்தத் தாதியுடைய புண்ணியமாகும். எனது எஜமானியம்மாள் இன்றுவரையில் மிக்க நல்லவளாகவே காணப்படுகிறார்கள். என்னுடைய அதிர்ஷ்டம் எப்படி இருக்கிறதோ!......

கிருஷ்ணு:—ஆகா!...உனக்கு வேலை கிடைத்ததா! உன் தம்பிக்கும் குணமாகிக்கொண்டு வருகிறதா! மிக்க சந்தோஷம். இதைக் கேட்கும்போதே எனது நோயும் குணமாகி விட்டதுபோல விருக்கிறது....சின்னம்மாள்!...என்று அழைத்து மேலே சொல்லமாட்டாது சிறிது நேரம் திணறினன். பிறகு சிறிது சமாளித்துக் கொண்டு......சின்னம்மாள்! உனக்கு ஓய்ந்த நேரத்தில் இங்கு வருகிருயா:......வித்யாசமாக எண்ணிவிடாதே! குழந்தையின் க்ஷேமத்தைத் தெரிவி......என் தாயாரைக் கண்டால் தேறுதல் கூறுகிருயா? ...கிழவியாகையினல் பயப்படுகிருள்...என் செய்வேன்......என்று கூறும்போதே கண்ணீர் பெருகியது. முகத்தை மூடிக்கொண்டான்.

இந்த வார்த்தையைக் கேட்டதும் சின்னம்மாளின் மனம் தத்தளித்தது. தான் தான் இதற்குக் காரணமாகிவிட்ட ஓர் பெரிய வருத்தம் தாக்கி வதைத்தது. இவள் கண்களும் தன்னை மீறி கண்ணீரைச் சொரிந்துவிட்டன. மிகவும் நெஞ்சை யடைக்கும் ஈன சுரத்துடன், "ஐயா! இந்தம் பேராபத்திற்குக் காரணம் நானே யல்லவா! என் மனம் என்னையே குத்திக் காட்டுகிறது. நான் இங்கு

வராமலும், பார்க்காமலும் இருப்பேனு! கட்டாயம் வருகிறேன். நீங்கள் கவலைப்படாதீர்கள். உடம்பு விரைவில் குணமாகிவிடும்... ...எஜமானியம்மாள் கூப்பிடுகிறார்களோ என்னவோ! நான் சென்று வரட்டுமா?''...என்று மிகத் துயரத்துடன் கேட்டாள்.

கிருஷ்ண :—ஆம்...ஆம்...நீ கட்டாயம் சீக்கிரம் சென்றுவா— என்று கூறிக்கொண்டே சுற்றுமுற்றும் தள்ளாடியபடியே பார்த்தான். அந்தப் பார்வையின் கருத்தை யறிந்த சின்னம்மாள், "ஏன் என்னைப் பார்க்கிறீர்கள்? என்ன வேண்டும். நான் செய்கிறேன். என்னிடம் தாராளமாகத் தெரிவியுங்கள்'' என்று கூறி அருகில் வந்து நின்ருள்.

கிருஷ்:—(மெல்ல இழுத்தவாறு) அம்மணீ!...இதோ இந்த பீரோவிலிருக்கும் ஜலத்தைக் கொஞ்சம் எடுத்துக் கொடு... தாகமாக விருக்கிறது — என்ருன். உடனே சின்னம்மாள் பீரோவிலிருந்த தண்ணீரை எடுத்து மிகவும் வணக்கமாயும் அன்புடனும் கிருஷ்ணனுக்குக் கொடுத்தாள். அதை யவன் குடித்தவுடன் வெயர்த்துவிட்டது. உடனே அருகிலிருந்த விசிறியினல் சற்று விசிறிப் பின்னர் விடை பெற்றுக்கொண்டு, அன்னப் பறவையைப் போல மெல்ல அசைந்து நடந்து போய்விட்டாள்.

இம்மாதிரியே சில தினங்கள் சென்றன. சின்னம்மாளின் எஜமானியம்மாளுக்கு குணமே காணுமல் அதிகரித்துவிட்டது. சில தினங்களில் அவ்வம்மை பிழைக்கமாட்டாள். வீட்டிற்குக் கொண்டு போகலாம் என்று கூறிவிட்டார்கள். இதைக் கேட்ட சின்னம்மாளுக்கு விசன மதிகரித்தது. தனக்கு ஏதோ சிறிது விமோசனம் ஏற்பட்டதாக நினைத்து மகிழுங் காலத்திற்குள் இந்தம்மாளுக்கு இப்படிப்பட்ட ஆபத்து வந்துவிட்டதே என்ற பெருங் கவலையும் திகிலும் உண்டாகிவிட்டன.

இந்தம்மாளை வீட்டிற்குத் தூக்கிக்கொண்டு போய்விட்ட பிறகு தனக்கு பிழைக்கும் வழி எப்படி என்கிற பயத்தினல் சோர்ந்துவிட்டாள். இவளுடைய விசனத்தை யறிந்த அந்த நோயாளியம்மாள் சின்னம்மாளுக்குத் தேறுதல்கள் கூறியதோடு

அவளுக்கு 10 ரூபாய்கள் சன்மானமாயும் கொடுத்து "அம்மா! நான் குணமாகி வீடு செல்கையில் உன்னையும் உடனழைத்துக் கொண்டுச் செல்லலாம் என்று வெகு ஆவலாக இருந்தேன். எனது எண்ணம் ஈடேறாமல் ஸ்வாமி செய்துவிட்டார். நான் இறப்பதற்காகவும் நான் கவலைப்படவில்லை. உன்னுடைய நிலைமையை எண்ணித்தான் விசனப்படுகிறேன். என்ன செய்வேன். என் விதி இது. உன் விதியது.

சின்னம்மாள்! இந்தப் பத்து ரூபாய் ஓர் பொருளே யல்ல. இதை என் அன்பின் அடையாளமாகக் கொடுத்தேன். எப்படியாவது நல்ல நடக்கையுடன் உத்தமியாகவும் சத்தியவதியாகவும் மானவதியாகவும் இரு. ஏனென்றால் ஈசன் உனக்கு வறுமையைப் பூரணமாகக் கொடுத்திருப்பதுபோல நல்ல புத்தியையும் தெளிந்த அறிவையும் பரிசுத்தமான களங்கமற்ற மனத்தையும் பெண்களுக்குச் சத்துரு வென்று சொல்லக்கூடிய வசீகரம் பொருந்திய அழகையும் கொடுத்திருக்கிறான்.

இந்த வஞ்சனை உலகத்தில் உனக்கு த்ரோகம் செய்யவும் தீங்கிழைக்கவும் உன் உயரிய கற்பைக் கபந்தன் போல உறிஞ்சவும் தான் முற்படுவார்கள். அம்மாதிரியான கொடுமைகளில்...மாய வலையில் அகப்பட்டுக்கொள்ளாமல் உனது கற்பைக் காத்துக்கொள். மோசம் போகாதே! ஜாக்ரதை...இதற்குமேல் நான் என்ன சொல்வேன். உன்னைப் பார்க்கப் பார்க்க என் மனம் உருகுகிறது...... உம்......உனக்கு மெனக்கும் இவ்வளவுதான் பந்தம்......என்று கண்ணீர் பெருகியவாறு கூறினாள். அன்றே அவள் தனது வீட்டிற்குக் கொண்டு போகப்பட்டாள்.

சின்னம்மாளுக்கு முதலில் உதவி செய்த தாதி இவளுடைய ஒழுக்கத்தையும் நல்ல மாதிரியான குணத்தையும் வேலை செய்யும் சுறுசுறுப்பையுங் கண்டு இவளுக்கு ஆஸ்பத்திரியிலேயே ஒரு வேலைக்காரியாக சிபார்சுகள் செய்து அமர்த்திவிட்டாள். இதுவும் ஓர் நல்ல காலந்தான் என்று சின்னம்மாள் வேலை செய்துகொண்டு

வந்தாள். அவ்வப்போது தனக்கு ஓய்ந்த நேரத்திலெல்லாம் கிருஷ்ணனைப் பார்க்கத் தவறமாட்டாள்.

ஆஸ்பத்திரியின் அனுபவங்களைக் காண சின்னம்மாளின் வியப்பும் திகைப்பும் அதிகரித்துவிட்டன. அங்கு வரும் நோயாளிகளிடம் பணம் பறிப்பதற்காகவே வேலை செய்துவரும் வேலைக்காரர்களின் கொண்டாட்டமும் பணம் கொடுக்காத நோயாளிகளை அலக்ஷியமாய் மிகவும் கேவலமாக நடத்துவதும் சிள்ளு சிள்ளென்று எரிந்து விழுவதும் துச்சமாகப் பேசுவதும் காண இப்படியும் இருக்குமா என்று திகைப்பாள்.

அதுவும் தவிர்த்து அங்குள்ள வேலைக்காரர்களும் வேலைக்காரிகளும் தாதிகளும் செய்யும் அக்ரமம், அனியாயம் கூறவே திறமன்று. அனியாயமாகக் கெட்டுப்போவதும் பிறகு கர்ப்பச் சிதைவுகளைச் செய்வதும், அதை மறைக்கும்பொருட்டுப் பல சூழ்ச்சிகளைச் செய்வதும் அவைகள் மூலம் பல அக்ரமங்களையும் அனியாயங்களையும் மனந் துணிந்து செய்வதும் கர்ப்பச் சிதைவின் கேடால் சிலருக்கு ஆபத்தாக முடிந்து கடைசியில் உயிரும் போவதும் இம்மாதிரியான லீலைகளைக் காணக் காண சின்னம்மாளுக்குப் பயமே எடுத்துக்கொண்டது. என்ன செய்வாள் ஏழைப் பெண்! இப்படியும் அநீதிகள் நடக்குமா வென்று திகைத்துவிட்டாள். அப்படியே தன் வேலைகளைச் செய்வதும் தனக்கெனவுள்ள விடுதியில் இருப்பதுமாகத் தன் காரியத்தைச் செய்துவந்தாள்.

அந்த ஆஸ்பத்திரியில் ஓர் பெரிய ஜமீந்தாரிணியம்மாள் வந்தாள். பூர்ண கர்ப்பிணி யாகையினால் இங்கு சில தினங்கள் தங்கி ப்ரஸவித்துப் பின் செல்வதாக வந்தாள். அந்தம்மாளுக்கு ப்ரத்யேகமாக இரண்டு தாதிகள் ஆஸ்பத்திரியி லிருந்தே அமர்ந்து வெகு ஜாக்ரதையுடன் கவனித்து வந்தார்கள்.

அந்த ஜெமீந்தாரிணியம்மாளுக்கு ஜல மலம் ஏந்திக் கொட்டவும் இன்னும் இதர வேலைகளைச் செய்யவும் சின்னம்மாள் அமைந்தாள். ஜெமீந்தாரிணி யிடம் நடுநடுங்கிக்கொண்டு சின்னம்மாள்

வேலை செய்வாள். ஜெமீந்தாரிணியம்மாள் ஒரு தினம் ஸ்நானம் செய்யும்போது அகஸ்மாத்தாக சின்னம்மாள் பார்த்துவிட நேர்ந்து விட்டது. அந்தச் சம்பவத்தைக் கண்டதும் சின்னம்மாள் வியப்பே வடிவமாக நின்றுவிட்டாள்.

அவளுடைய கண்களை அவளாலேயே நம்ப முடியாது ப்ர மித்து அசைவற்றுப் போய் "ஹா! அனியாயமே! அக்ரமமே! இதென்ன உலகம்! இதென்ன காட்சி! இத்தகைய அக்ரமங்களுக்கா உலகத்தில் நியாயம் என்றும் தருமம் என்றும் கூறுகிறார்கள். ஐயோ! இதைக் காணும்போதே என் அங்கம் பதறுகின்றதே...பூரண கர்ப் பிணியாகக் காணப்பட்டதெல்லாம் இத்தகைய வேஷமாகவா இருக் கிறது!

அடடா! அக்ரமமே! இந்தம்மாளோ பெரிய ஜெமீந்தாரிணி. செல்வத்திலும் செல்வாக்கிலும் நிறைந்து விளங்கும் இந்த அம்மாள் இத்தனை பெரிய மனுஷி இம்மாதிரியா துணிகளை அடுக்கி வயிற் றில் கட்டிக்கொண்டு தான் கர்ப்பிணி என்று நடித்து இங்கு வந்தி ருக்கிறார்கள். இந்த இரண்டு தாதியும் அந்த டாக்டரும் இதற்கு உடந்தையாகஇருந்து இந்தத் துணிகளை ஒழுங்காகக் கட்டுகிறார்கள். ஐயோ! அக்ரமமே! இவர்களின் சதியாலோசனையின் முடிவு என்ன வாகும். நாம் இதை இப்போதே வெளியிட்டு விடுவோமா.......... ஆகா!...இந்த அம்மாளுடைய புருஷனும் மற்றய குடும்பத்தினர்க ளும் இந்தப் பொய்க் கருப்பத்தை உண்மை என்று நம்பி எத்தனை தடபுடல்கள் செய்து உண்மையாக எண்ணி மகிழ்கிறார்கள். எத் தனை நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறார்கள். எத்தனை ஆவலுடன் குழந்தையின் பிறப்பை எதிர்பார்க்கிறார்கள். இந்தச் சூதுகளை யறி யாத அவர்கள் அகமகிழ்கின்றார்களே! இந்த ஆபாஸத்தை அறிந் தால் என்ன விதமான ஷாக் அடித்தவர்கள் போலத் தவிப்பார்கள். பிராணனையே விட்டுவிடுவார்கள் அல்லவா!

நாம் ஆத்திரப்பட்டு வெளிப்படுத்தி விடக்கூடாது. இதன் முடிவு எப்படியாகிறது. என்ன நடக்கின்றது என்பதை நாம் கவ னித்துக்கொண்டு அதற்குமேல் தான் வெளியிட வேண்டும்...ஆமாம்.

...இதுதான் சரியான யோசனை......இப்படித்தான் செய்யவேண்டும்'' என்று தனக்குள்ளேயே பல எண்ணங்களால் உலுப்பப்பட்டு ஓர் விதமான தீர்மானத்திற்கு வந்து, பின்னர் அங்கு நடக்கும் அக்ரம விநோதங்களை எல்லாம் கூர்ந்து கண்ணாடியின் மூலம் கவனித்து விட்டு, ஒன்றுமே அறியாதவள் போலச் சென்றுவிட்டாள்.

இந்தக் காட்சியின் தோற்றம் அவளுடைய மனத்தைத் தாக்கிக் கொண்டே இருந்தது. இதையே எண்ணி எண்ணி வியப்படைந்து மனத்திற்குள்ளே பொங்கிக் குழம்பிக் கொண்டிருந்தாள்.

கர்ப்பவதியம்மாளின் புருஷன் அன்று மாலையில் வந்து அந்தம்மாளிடம் குலாவுவதையும் அவளிட மிருந்து ஓர் அழகிய குழந்தையை எதிர்பார்த்து ஆவலுடன் பேசுவதையும் இந்தம்மாளை ப்ரத்யேகமாக கவனிக்கும்படிக்கு தாதிகளுக்கும் டாக்டருக்கும் சொல்லி, பணத்தை நோட்டு நோட்டாகக் கொடுப்பதையும் காணக் காண நமது ஏழைச் சிறுமியின் வயிறு எரிகிறது. அவளுடைய மனத்தில் கட்டு மீறிய உணர்ச்சி ததும்பி வேலை செய்கிறது.

இந்நிலைமையை யாருடன் அந்தப் பேதைப் பெண் சொல்லுவாள். அவளுக்குள்ள ஆத்திரமோ உடனே அவளுடைய கணவனிடமே தெரிவித்து விடலாமா என்று தோன்றுகின்றது. ஆனால் இவைகளை முற்றிலும் கவனிக்க முடியாது போய்விடுமாகையால் பொறுமையாக இருக்க வேண்டுமென்று தீர்மானித்து தன்னை யடக்கிக்கொண்டாள். இந்த நம்பத் தகாத விஷயங்கள் அவள் மனத்திலோர் தாங்க முடியாத உணர்ச்சியைக் கொடுத்துவிட்டன.

நாட்களோ சென்றுகொண்டே இருக்கின்றன. அந்தம்மாளுக்கோ ப்ரஸவ காலம் சமீபித்துவிட்டது. நமது சின்னம்மாள் மெல்ல தந்திரமாயும் ஜாடைமாடையாயும் அந்தம்மாளிடம் வாக்குக் கொடுத்தும் அவர்கள் வீட்டு வேலைக்காரர்களிடம் வாக்குக் கொடுத்தும் பேசி, இந்தம்மாளின் வரலாற்றை யொருவாறு தெரிந்து கொண்டாள்.

அதாவது இந்தம்மாளுக்குக் குழந்தை இல்லை என்றும், இவளுடைய புருஷன் ஏற்கெனவே விவாகம் செய்துகொண்ட மனைவிக்

கும் குழந்தை இல்லாத காரணத்தினால் அந்தம்மாளைத் தள்ளிவிட்டு இவளைக் கல்யாணம் செய்துகொண்டாராம். இவர்களுக்கு ஏராள மான செல்வமிருப்பதாயும் பங்காளிகள் சிலருக்கும் ஏராளமான சொத்து இருப்பதாயும் சில பங்காளிகள் மிகவும் ஏழைகளாக இருப் பதாயும் அந்த ஏழைப் பங்காளிகள் தங்கள் செல்வத்தின் மீது வரா மலிருக்கவும், பணக்காரப் பங்காளியின் செல்வங்களும் தமக்கே சேர வேண்டியும் அந்தம்மாள் பணத்தின் ஆசைகொண்டு தனக்கு எப்படி யாவது ஒரு குழந்தை இருக்குமாயின் இவைகளைச் சாதித்துக் கொள்ளலாம் என்ற யோசனையுடன் கர்ப்பவதி போல நடித்து கர்ப் பவதி ஆசைப்படுவதை எல்லாம் செய்து கொடுத்து விடுவார்கள் என்ற நம்பிக்கை கொண்டு கர்ப்பவதியா யிருக்கையில் ஒரு ஜதை பூராவும் வைரத்தினாலான ஆபரணங்களைச் செய்து தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டாள்.

அதோடு ஏராளமான பணத்தைச் செலவு செய்து தனது ரகஸியத்திற்கு இந்த இரு தாதிகளையும் ஒரு டாக்டரையும் உடந் தையாக வைத்துக்கொண்டு இந்த நாட்டியம் நடிப்பதை நன்கறிந்து கொண்டாள். சின்னம்மாளுக்கோ இந்த ரகஸியத்தின் முடிவு ஏற்பட்ட பிறகு தான் வெளியிட்டால் ஒருகால் தன் மீதே அது பழியாகிவிடுமோ என்ற யோசனையும் தோன்றியது. என்ன செய்ய லாம் என்று சிறிது நேரம் தியங்கினள். பிறகு ஒரு விதமான தீர் மானத்திற்கு வந்து சேர்ந்தாள்.

182981

எஜமானியம்மாள் இவளை அடிக்கடி வீட்டுக்கு அனுப்பி அதை வாங்கி வா; இதைக் கொடுத்து விட்டு வா! என்று தன் வீட் டிற்குச் சின்னம்மாளை அனுப்புவது உண்டு. அக்காலை எல்லாம் சின்னம்மாளைக் கண்ட அந்த எஜமானியின் புருஷன், “என்னம்மா! என்ன வேண்டும்? ஜெமீந்தாரிணி சவுக்கியமா இருக்கிறாளா! அவ ளுக்கு வேண்டிய சகல சுகமும் செய்கிறார்களா! அவளுக்கு ஒரு குறைவுமில்லையா? உனக்கு நான் தகுந்த ஸன்மானம் செய்வேன் பயப்படாதே! எனக்கும் ஒரு குழந்தை பிறந்து நான் கண்ணால் கண்டு களித்தால் போதும்” என்று அடிக்கடி கூறுவார்.

இதைக்கேட்கும்போதெல்லாம் சின்னம்மாளின் மனம் தவிக்